அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த வகையில்தான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். நான் முன்பே சொன்னது போல, மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி வழங்கிய நேரத்தில், நிலம் கையகப்படுத்துவதற்காக ஒதுக்கிய தொகை போதாது என்றும், குறைவாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்றும், குறிப்பிட்டு இன்ன தொகையை அதற்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அந்த வகையில்தான் திருத்திய மதிப்பீடு தயாரிக்க வேண்டியிருக்கிறதே தவிர, வேறு எந்தவிதமான மாற்றங்களைக் கொடுக்கவோ, அல்லது வேறு யாரையாவது பாதுகாக்க வேண்டும் என்றோ, இதில் எதுவும் செய்யப்படவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்தின்படி திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதற்குரிய ஏற்பாடுகள் முடிந்த பின்பு ஏற்கும் வகையில், இந்தத் திட்டம் இருக்குமானால், உடன்டியாக நடவடிக்கை எடுக்க அரசு முன் வரும்.

திரு. மா. சின்னராசு : இந்தத் திட்டம் அந்தப் பகுதிக்கு நீர்ப்பாசனம் கொடுப்பது மட்டும் அல்லாமல், கோவை மாநகரத்திற்கு ஏற்படுகிற வெள்ளத்தை தடுக்கிற திட்டமாகவும் பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பக் காலத்திலேயே கோவை மாநகராட்சி இந்த திட்டத்திற்காக நிதி உதவி அளிப்பதாக ஒத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, அதையும் கருத்தில் கொண்டு, பி.சி. ரேஷியோ, பைனான்ஸ் டிபார்ட்மெண்ட் வலியுறுத்தினால், வெள்ளத்தடுப்பு பணி நிவாரணத் திட்டம் என்ற வகையில் இந்த திட்டத்தை அமலாக்குவதற்கு, இந்த ஆண்டே அமலாக்குவதற்கு, உத்திரவாதம் அளிக்கும் வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, பி.சி. ரேஷியோவை பைனான்ஸ் வலியுறுத்துகிறார்களா இல்லையா என்ற விவரங்கள் இந்த அரசுக்கு வரவில்லை. தொகை போதாது என்ற காரணத்தால், திருத்திய மதிப்பீடுக்கு வந்திருக்கிறதே தவிர வேறு அல்ல. அந்த திருத்திய மதிப்பீட்டைப் பெற்று, அதற்குரிய ஆய்வுகளை நடத்தி கோப்பு சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு வந்தபிறகுதான், அரசு நடவடிக்கை எடுக்கும். இந்த நேரத்தில் இந்த கேள்விக்கு பதில் அளிக்க முடியாத நிலையில் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில்துறை மூலம் பொட்டாசியம் குளோரைட் தொழிற்சாலை துவக்கும் திட்டம்.

38—(*வினா எண். 10157)—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழில் துறை மூலம் பொட்டாசியம் குளோரைட் தொழிற்சாலை துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்பொழுது எந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) ஆம்.

(ஆ) இதன் மதிப்பீடு ரூ. 38.00 இலட்சம் ஆகும். இது நாளொன்றுக்கு 1 டன் பொட்டாசியம் குளோரைட் உற்பத்தி செய்யும்.

(இ) இந்த தொழிற்சாலை இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள குன்றக்குடியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைக்கு அடிக்கல் 23-2-1982 அன்று நாட்டப்பட்டது. 1983-84 நிதி ஆண்டு இறுதிக்குள் உற்பத்தி துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10-00)

2. தகவல் கோரல்.

(அ) தென் மாவட்டங்களில் வெள்ளத்தால் சீர்குலைந்த மின்சார விநியோகத்தை சீர் செய்தல்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 7 ஆம் தேதியன்று பெய்த பெருமழையின் காரணமாக மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் பல உயிர் சேதங்களும், பொருள் சேதங்களும், பயிர்களுக்கும் சேதங்கள் ஏற்பட்டதையும், மக்களுக்கு வழங்கப்பட்ட பல்வேறு உதவிகளைப் பற்றியும் முதலமைச்சர் அவர்கள் 12 ஆம் தேதியன்று வெள்ளை அறிக்கை வைத்து சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் ஹெலிகாப்டரில் போய் பார்த்ததாகச் சொல்லியிருக்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பற்றிய விவாதம் 20 ஆம் தேதியன்று வைக்கப்பட்டிருக்கிறது. அது பற்றி, நீங்கள் பார்த்தது கண்டது போன்ற விளக்கங்கள் எல்லாம் வேண்டாம். அந்த விவாதத்திற்கு முன்னாலே ஏதாவது முக்கியமான பிரச்னை வந்திருந்தால் சொல்லலாம்.